**2 வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி**

முன்னிலை : **திருமதி.R.L.பிரியதர்ஷினி, B.A., B.L.,**

2 வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,

திருநெல்வேலி

2026 ம் ஆண்டு ஜுலை மாதம் 20 ம் நாள் திங்கள்கிழமை

**இ.ம.எண். 7/2026 அதன் அ.வ.எண்.480/2023**

D.கில்பெர்ட் பொன்சிகா ... மனுதாரர்/1 ம் பிரதிவாதி

–எதிர்–

1) ரஞ்சிதம்
2) சிவகாமி சுந்தரி
3) தமிழ்செல்வி
4) முத்தம்மாள்
5) கோமதி
6) சாந்தி ... எதிர்மனுதாரர்கள் /1 முதல் 6 வாதிகள்

சல்மான் பீவி ... எதிர்மனுதாரர்கள் /பிரதிவாதி No.2

இம்மனு இந்நீதிமன்றம் முன்பாக 09.07.2026 அன்று இறுதி விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.செந்தில்குமார் அவர்கள் முன்னிலையாகியும், 1 முதல் 6 எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.ராமகிருஷ்ணன் அவர்கள் முன்னிலையாகியும் 7 ம் எதிர்மனுதாரர் அசல் வழக்கில் ஒருதலைபட்சமாக்கப்பட்டும் இருதரப்பு வாதத்தை கேட்டறிந்தும் ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் ஆராய்ந்து வழங்கும்,

**உத்தரவு**

மனுதாரர் தாக்கல் செய்துள்ள கூடுதல் எதிர்வழக்குரையை ஏற்றுக்கொள்ள உத்தரவு பிறப்பிக்கக்கோரி உரிமையியல் விசாரணை முறை சட்டம் கட்டளை 8 விதி 9 ன் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) மனுதாரர் ஒரு வழக்கறிஞரை நியமனம் செய்து வழக்கு நடத்தி வந்ததாகவும் அவர் மனுதாரர் கூறியது போல் விரிவான எதிர்வழக்குரை தாக்கல் செய்யவில்லை என்றும் மனுதாரரின் உரிமையை பாதுகாக்கும் விதமாக நல்ல முறையில் வழக்கை நடத்தவில்லை என்றும் வா.சா.1 ஐ முதல் விசாரணை செய்த பின் மனுதாரர் வழக்கு கட்டுகளை முந்தைய வழக்கறிஞரிடமிருந்து பெற்றதாகவும் வா.சா.1 ஐ குறுக்கு விசாரனை செய்யாததால் மனுதாரருக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப் பட்டது என்றும் எனவே மனுதாரரின் வழக்கறிஞர் ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்ய மனு தாக்கல் செய்து அது அனுமதிக்கப்பட்ட நிலையில் ஏற்கனவே வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை செய்ய கடைசி வாய்ப்பாக வாய்தா வைக்கப்பட்டிருந்ததால் வேறு வழியில்லாமல் வா.சா.1 ஐ மனுதாரர் குறுக்கு விசாரணை செய்தார் என்றும் தற்போதைய வழக்கறிஞர் கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய வேண்டியது அவசியம் என்று கூறினார் என்றும் எனவே இந்த மனு தாக்கல் செய்யப்பட்டது என்றும் கற்றறிந்த மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் வாதிட்டார்.

4) மனுதாரர் இம்மனுவை காலம் கடந்து தாக்கல் செய்துள்ளார் என்றும் மனுதாரரின் முந்தைய வழக்கறிஞர் விரிவான எதிர்வழக்குரையை மனுதாரர் கூறுவது போல் தாக்கல் செய்யவில்லை என்பதும் மனுதாரர் இவ்வழக்கிற்காக கூறியுள்ள பொய்யான காரணம் ஆகும் என்றும்

மனுதாரர் வழக்கு நடவடிக்கையின் தாமதமான கட்டத்தில் தனது சொந்த நடத்தையை சாதகமாக பயன்படுத்திக்கொள்ளவோ அவரது முந்தைய வழக்கறிஞர் மீது பழி சுமத்தவோ அனுமதிக்கவோ முடியாது என்றும் ஏற்கனவே வா.சா.1 முதல் விசாரணை செய்யப்பட்டு குறுக்கு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார் என்றும் அசல் வழக்கானது பிரதிவாதி தரப்பு சாட்சியத்திற்காக வைக்கப்பட்டுள்ள நிலையில் கூடுதல் எதிர்வழக்குரையை ஏற்றுக்கொண்டால் வழக்கின் முழு விசாரனையும் மறு திறப்பாகும் என்றும் கட்டளை 8 விதி 9ன் கீழ் விதி விலக்கான சூழ்நிலையில் எதிர்மனுதாரருக்கு பாதிப்பு ஏற்படாது என்றால் மட்டுமே கூடுதல் எதிர்வழக்குரையை தாக்கல் செய்ய அனுமதிக்க முடியும் என்றும் மனுதாரர் முற்றிலும் முரணான கூடுதல் எதிர்வழக்குரையை வாதி தரப்பு சாட்சி விசாரணை முடிந்த பின்பு தாக்கல் செய்துள்ளது ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றும் எனவே இம்மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றும் மாண்புமிகு உச்ச நீதிமன்றம் Special Leave Petition (C) No.34411/2025) என்ற வழக்கை சுட்டிக்காட்டி வாதிட்டார்.

5) அசல் வழக்கானது பிராது தபசில் சொத்தை பொறுத்து 2ம் பிரதிவாதி மனுதாரர் பெயருக்கு மேலப்பாளையம் சார்பதிவாளர் அலுவலகத்தில் வைத்து ஏற்படுத்தி கொடுத்த 25.02.2002ம் தேதியிட்ட கிரைய ஒப்பந்த ஆவணம் எண் 772/2002 செல்லாது என்றும் இல்லா நிலையது என்றும் வாதியை கட்டுப்படுத்தாது என்றும் விளம்புகை செய்யக்கோரியும் பிரதிவாதிகளோ அவரது வகையாட்களோ வாதியின் அமைதியான அனுபவத்தை இடைஞ்சல் செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6) அசல் வழக்கு மனுதாரர் வழக்கறிஞர் திரு.R.சரவணன் என்பவர் மூலம் முன்னிலையாகி வந்துள்ளார். அசல் வழக்கில் 20.03.2024 அன்று எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளார். அதன்பின் 13.06.2024 அன்று இவ்வழக்கில் எழுவினா வனையப்பட்டு வழக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்பட்டிருந்து 20.08.2024 அன்று வா.சா.1 விசாரிக்கப்பட்டு 19.09.2024 அன்று வா.சா.1 ஐ மனுதாரர் பகுதியாக குறுக்கு விசாரணை செய்துள்ளார். அதன்பின் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக 24.09.2024, 21.10.2024, 07.11.2024, 26.11.2024, 03.12.2024, 04.01.2015, 24.01.2025 ஆகிய தேதிகளில் வாய்தா வைக்கப்பட்டிருந்த நிலையில் 24.01.2025 அன்று மனுதாரர் தரப்பில் எந்தவித எடுத்துரைப்பும் இல்லாததாலும் மனுதாரரை அழைத்தும் நீதிமன்றத்தில் முன்னிலை ஆகாததால் மனுதாரரை பொறுத்து ஒருதலைபட்சமாக்கப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பில் கூடுதல் சாட்சி விசாரணைக்காக வைக்கப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பு வாதம் கேட்கப்பட்டு வழக்கின் தீர்ப்புக்காக 23.06.2025 அன்று வைக்கப்பட்டிருந்த நிலையில் மனுதாரர் ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்யவும் வழக்கை மறுதிறப்பு செய்யவும் தாக்கல் செய்த மனு 06.10.2025 அன்று அனுமதிக்கப்பட்டு 24.10.2025 அன்று வா.சா.1 ஐ குறுக்கு விசாரனை செய்துள்ளார். அதன்பின் வாதி தரப்பு சாட்சியம் முடித்து வைக்கப்பட்ட பின்பு பிரதிவாதி தரப்பு சாட்சியத்திற்காக வைக்கப்பட்டிருந்த நிலையில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

7) உரிமையியல் விசாரனை முறை சட்டம் கட்டளை 8 விதி 9 ன் கீழ் No pleading subsequenet to the written statement of a defendant other than by way of defence to a set – off or counter–claim shall be presented except by the leave

of the court and upon such terms as the court thinks fit, but the court may at any time require a written statement of additional written statement from any of the parties and fix a time for presenting the same. மேற்படி சட்டப்பிரிவில் ஏற்கனவே வழக்கு விசாரணை தொடங்கிய பின்பு கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய முடியாது என்று கூறப்படவில்லை. மாறாக, நீதிமன்றத்தின் அனுமதி இல்லாமல் கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய முடியாது என்று கூறப்பட்டுள்ளது.

8) எனவே முந்தைய வழக்கறிஞர் விரிவான எதிர்வழக்குரை தாக்கல் செய்யவில்லை என்பது மட்டுமே மனுதாரரின் வழக்கை பாதிக்கும் விதமாக அமையக்கூடாது என்பதாலும் மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்களுக்கு இடையே உள்ள உண்மையான பிரச்சனையை இந்நீதிமன்றம் கண்டறிவதற்கு ஏதுவாகவும் மனுதாரருக்கு ஒரு வாய்ப்பு வழங்கி அவரது கூடுதல் எதிர்வழக்குரையை பெற இம்மனுவை அனுமதிக்கலாம் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. மனுதாரரின் முந்தைய வழக்கறிஞர் விரிவான எதிர்வழக்குரை தாக்கல் செய்யவில்லை என்று மனுதாரர் கட்சி செய்வதால் மனுதாரர் தரப்பில் சுட்டிக்காட்டப்பட்ட SLP No.34411/2025 வழக்கின் தீர்ப்பு இந்த வழக்கின் சங்கதிகளுக்கு பொருந்தாது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. வா.சா.1 ஐ ஏற்கனவே குறுக்கு விசாரணை செய்த பின்பு இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் மனுதாரருக்கு ஏற்பட்டுள்ள இழப்பை செலவுத்தொகை செலுத்துவதன் மூலம் சரிசெய்யலாம் என்பதால் இம்மனுவை அனுமதித்து உத்தரவிட இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**9) இறுதியாக**

மனுதாரர் 1 முதல் 6 எதிர்மனுதாரர்களுக்கு செலவுத்தொகையாக ரூ.1000/—ஐ 27.07.2026 ம் தேதிக்குள் செலுத்தும்பட்சத்தில் இம்மனு அனுமதிக்கப்படும், செலுத்த தவறும் பட்சத்தில் இம்மனு தள்ளுபடி செய்யப்படும் என்று உத்தரவிடப்படுகிறது. மீண்டும் அழைக்க வாய்தா 27.07.2026.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்த்து பிழைநீக்கம் செய்யப்பட்டு இன்று 2026 ம் ஆண்டு ஜூலை மாதம் 20 ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

PRIYADHARSINI RAMAKRISHNAN LISAMMAL
orders uploaded on 0308.2026
Digitally signed by PRIYADHARSINI RAMAKRISHNAN LISAMMAL
Date: 2026.08.03 15:50:56 +0530

2 வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருநெல்வேலி

**மனுதாரர் தரப்பு சாட்சி சான்றாவணங்கள்— இல்லை**

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி சான்றாவணங்கள்— இல்லை**

PRIYADHARSINI RAMAKRISHNAN LISAMMAL
orders uploaded on 0308.2026
Digitally signed by PRIYADHARSINI RAMAKRISHNAN LISAMMAL
Date: 2026.08.03 15:51:02 +0530

2 வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருநெல்வேலி